# சமூக ஒளி

இதழ் - 2

1990 - 91

சமூக விஞ்ஞான மன்றம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

# அரச நிறுவனம் - நிர்வாகத்துறை பற்றிய ஒரு நோக்கு

*Political Institution -*
*Executive*
*An Assesment*

திரு. த. கிருஷ்ணமோகன்
உதவி விரிவுரையாளர், அரசறிவியல்
பொருளியல் துறை.

Executive என்ற பதம் அரசாங்க செயற்பாடுகளை குறிப்பாக சுட்டிக்காட்டுவதற்காக பயன்படுத்தப்படும் ஓர் பதமாகும். சட்டத்துறையினால் இயற்றப்படும் சட்டங்களை செயற்படுத்துதல் (Execute) அல்லது, அரசு இயற்றும் சட்டங்களை நிறைவேற்றுதல் ( Carry out ) என்பதே நிர்வாகத்துறையின் கடமையாகும். நிர்வாகத்துறை, நுண்ணிய நிலையில் ( Micro ) அரச நிர்வாகத்தின் (State Administration) உயர் தலைப்பீடமாக (Supreme Lead Ship) கூறப்படுகின்றது. நிர்வாகத்துறை, பெரும்பாக நிலையில் ( macro ) உயர்மட்ட, கீழ்மட்ட ( Supreme and Grass roots ) நிலைகளிலான முழு பொதுநிர்வாக அலுவலர்களையும் (Public Administrative Officers) உள்ளடக்கியதாக கருத்துக் கொள்ளப்படுகின்றது. கீழ்மட்ட அலுவலர்கள் பொது மக்களுடன் நேரடியாக தொடர்புபடுகின்ற நிர்வாக விடயங்களுக்கு பொறுப்பாக இருப்பவர்களாகும். உதாரணமாக ஆணையாளர்கள், செயலாளர்கள், இறைவரி அலுவலர்கள் போன்றவர்களாகும். இங்கு Executive என்ற பதம் நுண்ணிய நிலையிலேயே கருத்தில் எடுக்கப்படுகின்றது.

நிர்வாகத்துறைக்கான பிரதிநிதித்துவத்தில் வெவ்வேறுபட்ட வகைப்பாடுகள் கருத்தில் எடுக்கப்படுகின்றன. வெவ்வேறுபட்ட நாடுகளின் தனித்துவத்திற்கும், இயல்பிற்கும் ஏற்றமாதிரி நிர்வாகத்துறையின் கட்டமைப்பும், அதிகாரமும், செயற்பாடும் வியாபகம் அடைந்து செல்கின்றது. ஆயினும், நிர்வாகத்துறையினை பொதுமைப்படுத்தி நோக்குவோமாயின், அங்கு மூன்று வகையான வகைப்பாடுகள் மிகவும் முக்கியமானதாக அமைந்து விடுவதை அவதானிக்க முடிகின்றது. அவைகளாவன:-

1) தனி அல்லது உண்மை நிர்வாகத்துறை.
   Single or Real Executive
2) பாராளுமன்ற நிர்வாகத்துறை.
   Parliment Executive
3) பன்மை நிர்வாகத்துறை.
   Plural Executive

## 1. தனி அல்லது உண்மை நிர்வாகத்துறை:-

## (Single or Real Executive):-

இதனை ஜனாதிபதி நிர்வாகம் எனவும் அழைக்கப்படுவது உண்டு. ஜனாதிபதி

குறிப்பிட்ட காலத்திற்கு என தேர்தல் தொகுதி மூலமாக நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுகின்றார் இதனால் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு இருப்பதில்லை. ஐக்கிய அமெரிக்கா (U.S.A), பிரேசில் போன்ற நாடுகளில் இவ்வாறான நிர்வாகத்துறையே நடைமுறையில் பின்பற்றப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்க அரசியல் திட்டம் ஜனாதிபதிக்கு அனேக அதிகாரங்களை கொடுக்கின்றது. காங்கிரஸ் (Congress) இயற்றும் சட்டங்களை தனி நிலையில் இருந்து நிறைவேற்றுபவராக காணப்படுகின்றார். இதுவே உண்மை அல்லது தனி நிர்வாகத்துறைக்குரிய இயல்பாகும் ஐக்கிய அமெரிக்காவின் நிர்வாகத் துறையின் அதிகாரங்களையும் கடமைகளையும் விளங்கிக் கொள்வதன் மூலம் தனி அல்லது உண்மை நிர்வாகத்துறையினை மேலும் தெளிவாக்கிக் கொள்ள முடியும்.

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பல்வேறு கடமைகளையும், அதிகாரங்களையும் நிர்வாகத்துறையின் பெயரால் ஆற்ற வேண்டியுள்ளது. தலைமை நிர்வாகி (Chief Executive), வெளியுறவு கொள்கை நெறிப்படுத்தவாளர் (Directer of Foreign Policy) சட்டவாக்க அதிகாரி (Legislative Leader) பிரதம தளபதி (Commander in chief) அரசின் தலைவர் (Head of state) என பல்வேறு கடமைகளையும் அதற்கேற்ற அதிகாரங்களையும் கொண்டு காணப்படுகின்றார்.

### தலைமை நிர்வாகி (Chief Executive):-

தலைமை நிர்வாகி என்ற ஜனாதிபதியின் கடமையினைப்பற்றி அரசியலமைப்பின் சரத்து II பின்வருமாறு கூறுகின்றது. "ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி நிர்வாக அதிகாரத்தினை நிலைபேறாக (Vested) பெற்று விட்டார்", அதேசரத்து அவரின் பொறுப்பினைப் பற்றி கூறும்போது "சட்டங்களை விசுவாசத்துடன் நிறைவேற்றுவதில் கவனம் எடுக்க வேண்டும்" எனவும் கூறுகின்றது. இவ் இலக்கினை அடைவதற்காக ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பாரிய ஓர் பணிக்குழுவினையும், நிர்வாகக் கிளைகளையும் உதவிக்காக பேணிவருகின்றார். இவற்றின் மூலம் ஜனாதிபதி ஆலோசனைகளையும், உதவிகளையும் பெறமுடிகின்றது. இவர்களிடம் நிர்வாக விடயங்கள் தொடர்பாக மட்டுமன்றி, சட்டசபையில் எழுப்பப்படும் விமர்சன விளக்கங்களையும், கொள்கை தொடர்பான விடயங்களையும் கலந்தாலோசிக்கின்றார்.

### வெளியுறவு கொள்கை நெறிப்படுத்துவாளர் (Director of Foreign Policy)

ஐக்கிய அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையின் தலைமை நெறியாளராக ஜனாதிபதியே காணப்படுகின்றார். செனற் சபையின் 2/3 பங்கு அனுமதியுடன் ஏனைய நாடுகளுடன் உடன்படிக்கைகளை செய்து கொள்ளும் பொறுப்பு நிலையாக (Vested) இவரிடமே கொடுக்கப்பட்டுள்ளது. தேசிய அரசுகளுக்கான ராஜதந்திர அங்கீகாரத்தை வழங்கவும், நிராகரிக்கவும் ஜனாதிபதி அதிகாரம் பெறுகின்றார். உதாரணமாக 1933 இல் சோவியத் ரஷ்யாவை ரூஸ்வெல்ட் (Roosevelt) அங்கீகரித்தார். அதேபோல் இஸ்ரேல் பிரகடனப்படுத்தப்பட்ட சில நிமிடங்களுக்குள் ரூமான் (Truman) அதனை அங்கீகரித்தார் கியூபாவின் கஸ்ரோ (Castro) அரசாங்கத்துடனான இராஜரீக உறவுகளை முறித்துக் கொண்டு அதனை அங்கீகரிக்க ஐசன்ஹவர் (Eisenh wer) மறுத்திருந்தார்.

### சட்டவாக்க அதிகாரி (Legislative Leader)

சட்டசபைக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான உறவு தொடர்பாக அரசியல் திட்டம் வரையறுத்துக் கூறுகின்றது. அரசி

யல் திட்டம் ஜனாதிபதி காங்கிரஸிற்கு "State of union" தொடர்பான செய்தியை அனுப்புவதற்கு அதிகாரம் வழங்குகின்றது. தமக்கு சார்பான சட்டங்களை காங்கிரஸில் இயற்றுவதற்கு வாய்ப்பாக ஜனாதிபதியே "சட்ட தொடக்க"த்தினை காங்கிரஸிற்கு அனுப்பி வைக்கின்றார். அரசியல் அமைப்பு காங்கிரஸ் சட்டவாக்கம் மீதான மறுப்பாணை (Vetopower) அதிகாரத்தினை கொடுத்துள்ளது. ஒரு மசோதா ஜனாதிபதியிடம் அனுப்பப்படுகின்றபோது அதனை பத்து நாட்களின் தாமதிக்கச் செய்யலாம் அல்லது தனக்கு வழங்கப்பட்டுள்ள மறுப்பாணை அதிகாரத்தை (Vetopower) பயன்படுத்தி காங்கிரஸிற்கு திருப்பி அனுப்பலாம். இதனை காங்கிரஸ் 2/3 பெரும்பான்மையினரின் விருப்பத்துடன் ஜனாதிபதிக்கு திருப்பி அனுப்புமாயின், அதனை மீண்டும் ஜனாதிபதி நிராகரிக்க விரும்பினால் நிராகரித்து காங்கிரஸிற்கு திருப்பி அனுப்பலாம். இதனை ஜனாதிபதியின் Pock veto என அழைக்கப்படுகின்றது. இவற்றைவிட எதிர்கால சட்டசபை நிகழ்வுகள் பற்றி காங்கிரஸில் உரை நிகழ்த்த ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்ட செய்திகள், பொருளாதார அறிக்கைகள், நிகழ்கால கொள்கை இலக்குகள் தொடர்பாக செய்திகள் அனுப்புவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

### பிரதம தளபதி (Commander in cheif)

அரசியல் திட்டம் ஜனாதிபதியை முப்படைகளினதும் தளபதியாக பிரகடனப்படுத்தியுள்ளது. பிரதம தளபதி என்பதன் பெயரால் கிடைத்த அதிகாரத்தினை பயன்படுத்தி, நேரடியாகவே ஆயுதப்படைகளை நெறிப்படுத்துகின்றார். ஆயுதப் படைகளின் தளபதிகளை நியமிக்கவும் நீக்கவும், பதவியுயர்வு வழங்கவும் இவர் அதிகாரம் பெற்றவராகும். இவரே ஆயுதப் படைகளின் அளவு, சேவைகள் என்பனபற்றிய முடிவுகளையும் எடுக்கின்றார். அவசரகால நிலைமையின் போது ஆயுதப்படைகளை கட்டுப்படுத்தும் பாரிய அதிகாரத்தை பயன்படுத்தி யுத்தங்களை பிரகடனப்படுத்தவும், யுத்தத்திற்கு தலைமை தாங்கவும் ஜனாதிபதி அதிகாரம் பெற்றவராகும். உதாரணமாக 2-ஆம் உலகயுத்தத்தின் போது ஜப்பானில் அணுக்குண்டு வீசுவது தொடர்பான முடிவினை ஜனாதிபதி ட்ரூமான் (Truman) எடுத்திருந்தார். வடவியட்னாமில் குண்டுவீச்சு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஜனாதிபதி ஜோன்சன் (Johnsan) முடிவு எடுத்தார். 1970 இல் கம்போடியா விவகாரங்களில் தலையிடுவது தொடர்பாக ஜனாதிபதி நிக்சன் (Nixon) முடிவெடுத்திருந்தார்.

### அரசின் தலைவர் (Head of state)

அரசின் தலைவர் என்ற ஜனாதிபதியின் கடமை அவரின் வேறுபட்ட செயற்பாடுகளை வெளிப்படுத்துகின்றது. ஐக்கிய அமெரிக்க அரசுகளின் கௌரவம், அதிகாரம், சின்னம் ஆகிய எல்லாவற்றையும் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியே பிரதிபலிக்கின்றார். வெளிநாட்டு தூதுவர்களையும், அமைச்சர்களையும் ஐக்கிய அமெரிக்கா சார்பில் வரவேற்பவராகவும் ஜனாதிபதி காணப்படுகின்றார்.

### 2. பாராளுமன்ற நிர்வாகத்துறை (Parliment Executive)

பெயரளவு நிர்வாகியையும் (Nominal Executive) பாராளுமன்றத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் அமைச்சரவை அங்கத்தவர்களையும் கொண்டு நிர்வாகத்துறை இயங்குமானால், அது பாராளுமன்ற நிர்வாகத்துறை என அழைக்கப்படும். பாராளுமன்ற நிர்வாக முறைமை, கட்சி முறைமையின் வளர்ச்சியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தினை பெறும் கட்சியில் இருந்தே நிர்வாகத்துறைக்கு பொறுப்பான அமைச்

சர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். நடைமுறை பாரிய அதிகாரத்தினை பாராளுமன்றம் அமைச்சர்களிடம் கையளிக்கின்றது. இதனால் அமைச்சர்களின் அதிகாரம் நேரடியாக பாராளுமன்ற அங்கத்தவர்களிடம் தங்கியுள்ளதை காணமுடிகின்றது. அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறவேண்டிய நிலையிலேயே உள்ளார்கள். ஆகவேதான் அமைச்சர்களுடைய நிலை, செயற்பாடு, கடமை, அதிகாரம் என்பன அரசியல் திட்டத்தின் வழி எடுத்துக்கூறப்படுகின்றது. இதற்கு சிறந்த உதாரணமாக இங்கிலாந்தினை கூறமுடியும். இங்கு மன்னர் பெயரளவு நிர்வாகியாக இருக்கின்றார். அவரிடம் உள்ள நிர்வாக அதிகாரம் அமைச்சர்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான நிர்வாகத்துறை முறைமை இங்கிலாந்தில் மட்டுமன்றி, ஜப்பான், டென்மார்க், சுவீடன், நோர்வே, பெல்ஜியம், ஹொலண்ட் போன்ற நாடுகளிலும் காணப்படுகின்றது. அத்துடன் இங்கிலாந்தின் காலனித்துவத்தின் கீழ் இருந்த அநேகம் மண்டல நாடுகளிலும் இவ்வாறான ஒர் நிர்வாக முறைமையே பின்பற்றப்பட்டுவருகின்றது. இந்நாடுகளில் ஜனாதிபதி என்பவர் பெயரளவில் நிர்வாகியாக காணப்படுவார். அமைச்சர்கள் உண்மை நிர்வாகத்துறை அதிகாரிகளாக காணப்படுகின்றனர். இங்கிலாந்தின் நிர்வாகத்துறையின் கடமைகளையும், அதிகாரங்களையும் தெளிவாக விளங்கிக்கொள்வதன் மூலம், பாராளுமன்ற நிர்வாகத்துறையின் கடமைகளையும், அதிகாரங்களையும் மேலும் தெளிவாக்கிக் கொள்ளமுடியும்.

பிரித்தானிய நிர்வாகத்துறையின் பெயரளவு நிர்வாகியாகிய முடியே ( Crown ) உயர் நிர்வாகத்துறையாக ( Supreme Executive ) மதிக்கப்படுகின்றது. எல்லாவகையான நிர்வாக ஆணைகளும், அதிகாரங்களும் முடியில் இருந்தே பிறக்கின்றன. முடி இல்லாமல் பிரித்தானிய அரச இயந்திரம் செயல்படமுடியாது. முடியினுடைய பல்வேறுபட்ட செயற்பாடுகளையும் அரசியல் திட்டம் ஐக்கியப்படுத்திக் கூறுகின்றது. முடியே அரசினதும், நிர்வாகத் துறையினதும் தலைவராகும். முப்படைகளினது தலைவரும், பொது நிர்வாகத்தின் தலைவரும் தேவாலயத்தின் தலைவரும் இவரேயாகும். நீதிபதிகள், பொதுச் சேவையாளர்கள், தேவாலய அதிகாரிகள் போன்றோர்களை நியமிக்கவும், நீக்கவும் முடி அதிகாரம் பெற்றதாகும். யுத்த, சமாதான பிரகடனங்களை செய்து கொள்வது, ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவது எல்லா நாடுகளுடனும் வெளியுறவினை ஏற்படுத்திக் கொள்வது, தேசிய இறைமைப் பேணல், கட்டுப்பாடு, தேசிய நிதிச் செலவினங்கள் போன்ற அனைத்தும் முடியின் பெயராலேயே நிறைவேற்றப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக அமைச்சர் குழுவினை தெரிவு செய்வது, பிரதம மந்திரியைத் தெரிவு செய்வது, பாராளுமன்றத்தைக் கலைப்பது, பாராளுமன்றத்தின் ஒவ்வொரு புதிய அமர்வின் போது பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துவது போன்ற நிகழ்வுகள் யாவும் முடியினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

முடி உயர் சம்பிரதாய நிர்வாகத் துறையாக இருக்க, அரசியல்திட்ட சம்பிரதாயத்தின்படி பாராளுமன்றத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் அமைச்சர்குழு உண்மை நிர்வாகமாக செயற்படும். இங்கிலாந்தின் பாராளுமன்றமுறை கட்சியரசியல் முறையிலேயே பெரிதும் தங்கியுள்ளது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தினை பெறும் அரசியல் கட்சியில் இருந்து, அமைச்சர்குழு தெரிவு செய்யப்படுகின்றது. இவ் அமைச்சர்குழு பாராளுமன்றத்திற்கு பொறுப்பு கூறவேண்டியதாகும். முடி அமைச்சர்குழு அங்கத்தவர்களின் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும், என்ற நிலையே காணப்படுகின்றது.

அமைச்சர்குழு சட்டசபை செயற்பாடு, பொது நிர்வாகவியல் செயற்பாடு, இணைப்பாளர் ( Co-ordinaters ) செயற்பாடு என மூன்று வகை செயற்பாடுகளை கருத்தில் எடுக்கின்றது.

1) பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டிய வெறு பட்ட கொள்கைகளை இறுதியாக தீர்மானிக்கின்றது. இது கொள்கை வகுத்தல் தொடர்பான அதிகாரம் எனப்படுகின்றது. சட்ட சபை செயற்பாட்டினை நிறைவேற்றும் பணி எனவும் கூறப்படுகின்றது.

2) பாராளுமன்றம் உத்தரவிடும் கொள்கைகளின்படி நிரந்தர நிர்வாகத்தினை ( Civil Executive ) கட்டுப்படுத்தும் உயர் அதிகாரம் நிலையாக (Vested) அமைச்சர்குழுவிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது அரச நிரந்தர நிர்வாகத் தலைவர்களின் செயற்பாட்டினை கட்டுப்படுத்துவதாகும். இது பொது நிர்வாக செயற்பாட்டினை நிறைவேற்றும் பணி என கூறப்படுகின்றது.

3) எல்லா அரச திணைக்களங்களினதும் செயற்பாட்டினை தீர்மானிப்பவர்களும் -இணைப்பவர்களும் ( Co - ordinates ) அமைச்சர் குழுவினரேயாகும்.

பாராளுமன்றத்திற்கு கொள்கைகளை தீர்மானித்து சமர்பிக்கும் அமைச்சர்குழுவின் செயற்பாட்டினை கருத்தில் எடுக்கின்றபோது. அதன் பிரதான செயற்பாடு சட்டசபை செயற்பாடேயாகும். நடைமுறையில் அரசின் உயர் சட்டவாக்கமையமாக அமைச்சர்குழுவே காணப்படுகின்றது. முக்கியமான எல்லா மசோதாக்களும் அமைச்சர் குழுவினால் உருவாக்கப்பட்டு நகல் அமைப்புக்களாக பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும். இவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் எல்லா வகையான மசோதாக்களுக்கும் அமைச்சர்குழு வினாக்கும் உரையையும் கொடுக்கின்றது.

பாராளுமன்றம் மசோதாக்களை நிராகரிக்க அல்லது திருத்த முற்பட்டால் அமைச்சர்குழு அதனை எதிர்க்கும். பொதுவாக அமைச்சர்குழு கூட்டுப்பொறுப்பு ( Collective Responsibility ) என்ற தத்துவத்தினால் கட்டுப்பட்டவர்களாகவே உள்ளனர். கூட்டுப் பொறுப்பு என்பது பொதுவாக இரண்டு வகையில் அமைச்சர்களை கூட்டாக செயற்படவைக்கின்றது.

1) ஒவ்வொரு அமைச்சரும் தனிப்பட்ட ரீதியில் தனது திணைக்களத்திற்கும், அதன் செயற்பாட்டிற்கும் பொறுப்பானவர்கள்.

2) அமைச்சர்கள் கூட்டாக எல்லா திணைக்களத்திற்கும் பொதுக் கொள்கைக்கும் பொறுப்பானவர்கள்.

கூட்டுப் பொறுப்பு என்ற தத்துவத்தினால் அமைச்சர்குழு கட்டுப்பட்டதனால் அவர்கள் கொண்டு வரும் எந்த மசோதாவிற்கும் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு வருமாயின், பலத்துடன் அவ் எதிர்ப்பினை நிராகரிக்கின்றார்கள். தீவிரமான ஒர்நிலை ஏற்படுமாயின் அவர்கள் பதவியிலகக் கூட தயங்குவதில்லை.

இங்கிலாந்தின் நிர்வாகத்துறையாகிய அமைச்சரவையில் பிரதம மந்திரி முதன்மை பெறுகின்றார். பொதுவாக பெரும்பான்மை பலத்தினை பெற்ற கட்சியின் தலைவரே பிரதம மந்திரியாக முடியினால் நியமிக்கப்படுகின்றார். முடி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்ற அரசியல் கட்சியின் விருப்பத்திற்கு மாறாக பிரதம மந்திரியினை நியமிப்பதுமில்லை. இவரே அமைச்சர் குழுவிற்கு தலைமைதாங்குகின்றார். பிரதம மந்திரி இங்கிலாந்தின் அரசியல் முறைமையில் முதன்மையான இடத்தை பெறுகின்றார். பிரதம மந்திரியின் நிலை தொடர்பாக பிரபு 'Morley' கருத்து தெரிவிக்கும்போது "is the keystone of the Cabinet Arch" என்கின்றார். அவர் தன்

கட்சியின் தலைவராக, பொதுவாக இருப்பதினால், அவருடைய கட்சி அதிகாரத்திற்கு வந்தவுடன் அவர் முதலமைச்சராகி விடுகின்றார். அரசாங்கத்தின் தலைவராக இருப்பதினால் அமைச்சரவை உறுப்பினர்களை நியமிக்கவும், அவர்களை இடைநிறுத்தவும் அதிகாரம் பெற்று விடுகின்றார். ஆளுமை என்பது பிரதம மந்திரியின் அதிகாரத்தினை தீர்மானிப்பதில் முக்கிய இடத்தினை பெறுகின்றது. எப்போதும் பிரதம மந்திரி தனிப்பட்ட செல்வாக்கை மக்களிடையேயும், அரசாங்கத்திற்குள்ளும் பெற்று வைத்திருக்க வேண்டும். தேர்தலை எப்போதும் சந்திக்கக்கூடிய விதத்தில் பொதுசன அபிப்பிராயத்தினை தனக்கு சாதகமாக வைத்திருக்க வேண்டும். Jennings பிரதம மந்திரி என்பவர் "என்ன செய்வது, அதை எப்படி, எப்போது செய்வது என்பவற்றை தெரிந்திருக்க வேண்டும். கீழ் நிலைகளில் (Grass roots) இருந்து வரும் முறைப்பாடுகளை அவர் படிக்க வேண்டும்" எனக் கூறுகின்றார்.

## 3. பன்மை நிர்வாகத்துறை (Plural Executive)

பாராளுமன்ற நிர்வாகத்துறையிலும், பாராளுமன்றம் சாராத நிர்வாகத்துறையிலும் உள்ள சிறப்பான அம்சங்களையும், திறமைகளையும் ஒன்றுபடுத்தி உருவாக்கப்பட்ட ஓர் நிர்வாகத்துறைமுறையே பன்மை நிர்வாகத்துறை முறையாகும். பொதுவாக பாராளுமன்றம் சாரா நிர்வாகத்துறையாக இது வகைப்படுத்தப்பட்டாலும், உலகின் ஒவ்வொரு நிர்வாகத்துறை முறைமைகளில் இருந்தும் இது வேறுபடுவதுடன் பன்மைத்தன்மையிலான இயல்பினையும் வெளிக்காட்டுகின்றது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக சுவிற்சர்லாந்து (Switzerland) காணப்படுகின்றது.

Federation இனின் நிர்வாகத்துறை அதிகாரம் Federal Council என்னும் அமைப்பிடம் நிலையாக (Vested) கொடுக்கப்பட்டுள்ளது. Federal Council சட்ட சபையின் இரு சபைகளினதும் முதல் அமர்வின் போது தெரிவு செய்யப்படுகின்றது. இதன் பதவிக்காலம் நான்கு வருடங்களாகும். இதில் 7 பேர் அங்கம் வகிக்கின்றார்கள். Federal Concillors ஒரே கட்சியில் இருந்தோ அல்லது ஒரே கொள்கையினை பின்பற்றுபவர்களுக்கிடையில் இருந்தோ தெரிவு செய்யப்படுவதில்லை. ஆனால், ஒரே கன்டன் (Contan) இல் இருந்து ஒன்றிற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் Federal Council இற்கு தெரிவு செய்யப்படக்கூடாது என்பதை அரசியல் திட்டம் வரையறுத்துக் கூறுகின்றது. Federal Council இலுக்கு Council இலில் உள்ள ஒருவர் தலைவராக தேசியபேரவையால் தெரிவு செய்யப்படுகின்றார். இவரின் பதவிக்காலம் ஒருவருடமாகும். Federal Council இற்கு உபதலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படுகின்றார்; இவரும் Council இல் இருந்தே தெரிவு செய்யப்படுகின்றார். தலைவர், நிர்வாகத்துறைக்கு என்று அரசியல் திட்டம் வழங்கியுள்ள அதிகாரங்களை மீறமுடியாது. தலைவருக்கு என விசேட அதிகாரங்களும் கிடையாது. ஏழுபேருக்கும் (தலைவர் உட்பட) சம அதிகாரங்களே வழங்கப்பட்டுள்ளன. மேலும் Council அங்கத்தவர்களை நீக்கவோ நியமிக்கவோ தலைவருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. Federal Council அங்கத்தவர்கள் ஏழு பேரும் தனித்தனியே ஏழு அமைச்சகங்களுக்கு பொறுப்பானவர்களாகும். Federal Council சட்டத்துறையாகவும், நிர்வாகத்துறையாகவும், நீதித்துறையாகவும் செயற்படுகின்றது. சட்டத்துறை செயற்பாட்டினை பொறுத்த வரையில் Federal Council சட்ட உருவாக்கத்தில் பெரும் பங்கு வகிக்கின்றது. ஏறக்குறைய 95% மான பிரேரணைகளை Federal Council தயாரிக்கின்றது. முன்னேற்றகரமானதும், ஆக்கபூர்வமானதுமான ஆலோசனைகளை தனியார் பிரேரிக்கமுடியும். அவ்வாறான பிரேரணைகளை Federal Council பரிசீலனை செய்கின்றது. அவசரகால

நிலைமைகளில் சாதாரண சட்டங்களையும், Federal Law வினையும் செயற்படுத்தும் அதிகாரம் ... பாராளுமன்றம் Federal Council இற்கு கொடுத்துள்ளது. சட்ட உருவாக்கத்தில் Federal Council மிகப்பெரிய செல்வாக்கினை கொண்டுள்ளது. மசோதாக்கள் Council ஆல் வரையப்படுகின்றது அல்லது சட்ட ஆக்கத்திற்காக பாராளுமன்றத்திற்கு சிபார்சு செய்யும். இவ்விரண்டில் ஒன்றே நடைமுறையில் பின்பற்றப்படுகிறது. நிர்வாகத்துறை செயற்பாட்டினை பொறுத்தவரையில் Federal council வே நிர்வாகத்துறைக்கு தலைமை தாங்குகின்றது. Federal Law க்களை அவதானித்து உத்தரவாதப்படுத்துகின்றது. மேலும், Contans களின் அரசியல் திட்ட செயற்பாட்டினை உத்தரவாதப்படுத்துகின்றது. வெளிநாட்டு உறவுகளுக்கும், கொள்கைகளுக்கும் Federal council பொறுப்பானதாகும். சுவிற்சர்லாந்தின் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்துவதுடன், சுதந்திரம், நடுநிலைமை என்பவற்றை பேணுகின்றது.


## Reference

1. Mathew .T and Krishnan .V .N: **Modern Government**, Madras, Viswanathan at the Central Art Press, 1958.

2. Abcarian Gilbert and Masannat. George . S, **Contemporary Political Systems - An Introduction to Government**; Newyork. 1970.

3. Strong . C .F: **Modern Political Constitution - An Introdution to the Comparative Study of Their and Existing Form**, London; Sidgwick & Jackson limited, 1965.

4. Appadorai .A; **The Substance of politics**; Madras, Oxford University Press; 1952.


**உண்மை, கற்பனை அல்ல**

தற்போது காட்டுவள உற்பத்திகளின் தேறிய ஏற்றுமதியாளர்களாக இருக்கும் 33 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இரண்டாயிரம் ஆண்டளவில் 10 ஆக குறைந்துவிடும். ஆசியாவில் எஞ்சியுள்ள உலர்வலய உறுதியான மரங்கள் தற்போது அகற்றப்படும் வேகத்தில் இன்னும் 40 வருடங்களுக்கு மட்டுமே போதுமானதாகும். ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்காவிற்கு இது முறையே 85, 156 வருடங்களாகக் காணப்படுகின்றது.